பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

25 08 2026 12 40

செவ்வாய்க்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மின்னணு பணப் பரிமாற்ற முன்னேற்றத்தில் ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டண முறையின் பங்கு இன்றியமையாதது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் முடக்கி வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

3. பேரிடர் மேலாண்மைக்காக அக்னி வீரர்களைப் பயன்படுத்தி Arjun Bahini படைப் பிரிவைத் தொடங்க மேற்குவங்க அரசு முடிவெடுத்துள்ளது.

4. அமெரிக்காவில் H1B விசாவுக்கு ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 265 டாலர் கூடுதல் கட்டணம் வசூலிக்க அந்நாட்டின் உள்நாட்டு பாதுகாப்புத்துறை பரிந்துரை செய்துள்ளது.

5. கொழும்பில் நடைபெறும் இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் உணவு இடைவேளை வரை இலங்கை 4 விக்கெட் இழப்புக்கு 130 ரன் எடுத்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் மின்னணு பணப் பரிமாற்ற முன்னேற்றத்தில் ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டண முறையின் பங்கு இன்றியமையாதது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டண முறை தொடங்கி 10 ஆண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த பணப் பரிவர்த்தன முறை அனைத்து மக்களையும் சென்றடைந்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும் UPI பணப் பரிமாற்றம் தொடர்பான மக்களின் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளுமாறு பிரதமர் கேட்டுக்கொண்டார்.

*கடந்த 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் தேதி தொடங்கப்பட்ட UPI ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டண முறை தற்போது 13 ஆயிரம் மடங்கு அதிகரித்துள்ளது.*

*கடந்த 2016-17 நிதியாண்டில் ஒரு கோடியே 78 லட்சமாக இருந்த UPI பணப் பரிவர்த்தனை எண்ணிக்கை சென்ற நிதியாண்டில் 24 ஆயிரத்து 162 கோடி அளவுக்கு அதிகரித்துள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*மேலும் 2016-ல் 7 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த பணப் பரிவர்த்தனை சென்ற ஆண்டு 3 கோடியே 314 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.*

*தற்போது ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஃபிரான்ஸ், இலங்கை, சிங்கப்பூர், கத்தார் உள்ளிட்ட 11 நாடுகளில் UPI ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டண முறை செயல்பட்டு வருவதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*நாட்டின் டிஜிட்டல் கட்டமைப்பில் UPI ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டண முறை முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<>>>>*

*ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டண முறை மூலம் நாட்டின் பணப் பரிமாற்றம் எளிதாக்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், சிறு வணிகர்கள் முதல் கடைகள், வர்த்தகர்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் வரை பணப் பரிவர்த்தனைக்காக UPI பணப் பரிமாற்றத்தை பயன்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.*

*நாட்டின் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனையின் முன்னேற்றத்தில் UPI-ன் பங்கு முக்கியமானது என்று டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*<<<<>>>>*

*ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டண முறையின் மூலம் சிறு வணிகர்கள் முதல் அனைத்து தரப்பினரும் பயனடைந்து வருகின்றனர்.*

*பணப் பரிவர்த்தனைக்கு இது எளிதான முறை என்று தருமபுரி மாவட்ட மக்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.*

*(Voice Byte – Beneficiaires – 58 Sec)*

*<<<<>>>>*

*நாடாளுமன்ற நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் முடக்கி வருவதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் எழுதிய கட்டுரையில், கேள்விகளை எழுப்பவும், போராட்டம் நடத்தவும் உரிமை இருப்பதாக கூறிய அவர், நாடாளுமன்ற நடவடிக்கைகளை முடக்க அதிகாரம் இல்லை என்று தெரிவித்தார்.*

*நாடாளுமன்றம் என்பது அரசியல் கட்சிகளுடையது அல்ல, மக்களுடையது என்று நினைவிருக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.*

*பல்வேறு முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற எதிர்க்கட்சிகளுடன் அர்சு ஆலோசனை நடத்தியதை திரு. கிரண் ரிஜிஜு சுட்டிக்காட்டினார்.*

*<<<<>>>>*

*பேரிடர் மேலாண்மைக்காக அக்னி வீரர்களைப் பயன்படுத்தி Arjun Bahini படைப் பிரிவைத் தொடங்க மேற்குவங்க அரசு முடிவெடுத்துள்ளது.*

*இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி, அடுத்த மாதத்தில் இது செயல்படத் தொடங்கும் என்று கூறினார்.*

*இதுவரை 200 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 100 பேர் கொல்கத்தாவிலும், 50 பேர் மலைப் பகுதிகளிலும், 50 பேர் கடலோரப் பகுதிகளிலும் பணியமர்த்தப்படும் என்றும் கூறினார்.*

*தேசியப் பேரிடர் மேலாண்மைப் படையின் அடிப்படையில் இந்த Arjun Bahini பேரிடர் படை தொடங்கப்பட உள்ளதாக அவர் கூறினார்.*

*தீயணைப்புத் துறை, வனத்துறை, காவல்துறை, பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட துறைகளில் அக்னி வீரர்களுக்கு 20 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று திரு. சுவேந்து அதிகாரி தெரிவித்துள்ளார்.*

*<<<<>>>>*

இந்தியா - சீனா இடையேயான உறவுகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், சீன தலைநகர் பெய்ஜிங்கில் இன்று அந்நாட்டு துணை அதிபர் Han Zheng உடன் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து ஆலோசனை நடத்தினார்.

இதுதொடர்பாக சீனாவுக்கான இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இரு நாடுகளுக்கிடையேயான சிறப்புக் குழுக் கூட்டத்தில் எல்லைப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட முக்கியமாக விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவில் H1B விசாவுக்கு ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 265 டாலர் கூடுதல் கட்டணம் வசூலிக்க அந்நாட்டின் உள்நாட்டு பாதுகாப்புத்துறை பரிந்துரை செய்துள்ளது.

இது தொடர்பாக அத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், H1Bக்கு தேவையான கட்டணத்திற்கு அதிகமாக இந்தப் புதிய கட்டணம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளது.

இது நடைமுறைக்கு வந்தால் வருடத்தில் 880 கோடி டாலர் வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அத்துறை தெரிவித்துள்ளது.

அரசு சட்டவிரோதமாக குடியேறுபவர்களை தடுப்பதற்கு செலவிடும் நிதியை ஈடு செய்ய இந்தத் தொகை பயன்படுத்தப்படும் என்றும் கூறியுள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவின் பொருளாதார நடவடிக்கைகளை எதிர்கொள்ள ஈரான் இரண்டாண்டு சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஈரான் நிதியமைச்சர் Ali Madanizadeh வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவின் பொருளாதார தடைகளை எதிர்கொள்ள ஈரான் தயாராகி வருவதாகத் தெரிவித்தார்.

வளைகுடா பகுதிகளில் இருந்து எண்ணெய் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்படும் என்று கூறிய ஈரான், ஹோர்முஸ் நீரிணையில் இருந்து கப்பல் போக்குவரத்திற்கும் தடை செய்யப்படும் என்று தெரிவித்துள்ளது.

முன்னதாக ஈரானுடனான அனைத்து பொருளாதார உறவுகளையும் நிறுத்தப்போவதாக அமெரிக்க நிதித்துறை அமைச்சர் Scott Bessent அறிவித்திருந்தார்.

கப்பல், விமானப் போக்குவரத்து, தொழில்நுட்பம், தங்கம், மின்னணு துறைகளில் ஈரான் மீது வர்த்தகத் தடை விதிக்கப்படும் என்றும் அவர் அறிவித்திருந்தார்.

<<<<>>>>

பஞ்சாபில் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி 117 தொகுதிகளிலும் போட்டியிடப்போவதாக கட்சியின் பொதுச்செயலாளர் திரு. சந்தோஷ் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் கட்சியின் மண்டலக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள பஞ்சாப் சட்டப்பேரவைத் தேர்தலுக்காக கட்சி உறுப்பினர்கள் தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இக்கூட்டத்தில் மாநில பிஜேபி தலைவர் திரு. Kewal Singh உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர்.

<<<<>>>>

கேரள மாநிலத்தில் திருவோணம் பண்டிகை நாளை கொண்டாடுவதன் முன்னோடியாக இன்று உத்தராட பண்டிகை கொண்டாடப்படுகிறது.

மக்கள் சந்தைகளில் சென்று திருவோணத்திற்கு தேவையான காய்கறிகள், பழங்கள் மற்றும் புத்தாடைகள் உள்ளிட்டவற்றை வாங்கி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வீடுகளில் பூக்கோலம் போட்டு அலங்கரித்து ஓணம் பண்டிகையை கொண்டாடி வருகின்றனர்.

கேரள அரசு சார்பாக ஓணம் மற்றும் சுற்றுலா வார விழா நேற்று தொடங்கியது.

இதையொட்டி தலைநகர் திருவனந்தபுரம், கொல்லம் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சபரிமலை சுவாமி ஐயப்பன் திருக்கோயில், குருவாயூரப்பன் கோவில் உள்ளிட்ட கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

<<<<>>>>

பிஹாரில் மழை வெள்ளத்தால் தலைநகர் பட்னா உள்ளிட்ட பகுதிகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளன.

மழை வெள்ளத்தால் கங்கையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

பகல்பூர், பெகுசராய் மாவட்டங்களில் நூற்றுக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை வான்வழியாக ஆய்வு மேற்கொண்டார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

ஒடிசாவில் படிப்படியாக மழை குறையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த இரு வாரங்களாக கனமழை பெய்து வரும் பகுதியில் மழை வெள்ளம் வடியத் தொடங்கியுள்ளதால் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

இருப்பினும் Jajpur உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு காரணங்களால் பள்ளிகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

Baitarani ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

மாவட்ட நிர்வாகம் நிலைமையைக் கண்காணித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கொழும்பில் நடைபெறும் இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் உணவு இடைவேளை வரை இலங்கை முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 130 ரன் எடுத்துள்ளது.

இந்திய பந்துவீச்சாளர் பிரசித் கிருஷ்ணா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

<<<<The End>>>>